### நாடு முழுவதும்

# ரயில்வே நவீனமயமாக்கல் திட்டத்தில் முன்னேற்றம் உள்ளதா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை.23-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஜூலை 22, 2026 அன்று மக்களவையில், நாடு முழுவதும் ரயில்வே நவீனமயமாக்கல் திட்டங்களின் முன்னேற்றம், உயர் வேக மற்றும் மேம்படுத்தப்பட்ட வேக ரயில் சேவைகள், வந்தே பாரத் மற்றும் அம்ரித் பாரத் ரயில்கள், அதிவேக ரயில் திட்டங்கள், பயணிகள் பாதுகாப்பு, தொழில்நுட்ப மேம்பாடுகள், ரயில் நிலைய மேம்பாடு மற்றும் எதிர்கால ரயில்வே நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

பயணிகள் பாதுகாப்பு, வேகம், இயக்கத் திறன், பயண வசதி மற்றும் நவீன தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் ரயில்வே நவீனமயமாக்கல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று அமைச்சர் தெரிவித்தார். உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் (இருக்கை மற்றும் படுக்கை வசதி), அம்ரித் பாரத் மற்றும் நமோ பாரத் விரைவு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாகவும், தற்போது 162 வந்தே பாரத் ரயில் சேவைகளும், 36 இருவழி அம்ரித் பாரத் ரயில் சேவைகளும் இயக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு வசதிகள்!**

அம்ரித் பாரத் ரயில்களில் 11 பொது வகுப்புப் பெட்டிகள், 8 படுக்கை வசதிப் பெட்டிகள், ஒரு உணவுப் பெட்டி மற்றும் இரண்டு சுமை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்டிகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்தார். கவச் பாதுகாப்பு அமைப்பு, தானியங்கி கதவுகள், கண்காணிப்பு கேமராக்கள், மேம்பட்ட தீ பாதுகாப்பு, அவசர தொடர்பு வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு நவீன அம்சங்கள் இந்த ரயில்களில் இடம்பெற்றுள்ளன என்றும் கூறினார்.

முதல் வந்தே பாரத் படுக்கை வசதி ரயில் 2026 ஜனவரி 22 முதல் சேவையைத் தொடங்கியுள்ளதாகவும், புறநகர் மற்றும் குறுகிய தூரப் பயணிகளுக்காக தற்போது இரண்டு இருவழி நமோ பாரத் விரைவு ரயில் சேவைகள் இந்திய ரயில்வே வலையமைப்பில் இயக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், "நமோ கிரீன் ரயில்" என்ற நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில் 2026 ஜூலை 17 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், உலகின் மிக நீளமான மற்றும் அதிக திறன் கொண்ட அகலப்பாதை ஹைட்ரஜன் ரயிலான இது கார்பன் டை ஆக்சைடு வெளியீடில்லாதசுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகவும் கூறினார்.

508 கிலோமீட்டர் நீளமுள்ள மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் திட்டம் முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், திட்டத்திற்குத் தேவையான நிலம் முழுமையாக கையகப்படுத்தப்பட்டு அனைத்து சட்ட அனுமதிகளும் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், 2026-27 ஒன்றிய வரவு-செலவுத் திட்டத்தில் மும்பை-புனே, புனே-ஹைதராபாத், ஹைதராபாத்-பெங்களூரு, ஹைதராபாத்-சென்னை, சென்னை- பெங்களூரு, டெல்லி-வாரணாசி மற்றும் வாரணாசி-சிலிகுரி ஆகிய ஏழு புதிய அதிவேக ரயில் வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதிவேக ரயில்களுக்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் திறனும் நாட்டிலேயே மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**தானியங்கி ரயில் பாதுகாப்பு!**

ரயில்வே பாதுகாப்பை வலுப்படுத்த செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஆய்வு அமைப்புகள், கவச் தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு, நவீன சமிக்ஞை மற்றும் தண்டவாள கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும், 2026 ஜூலை 13 நிலவரப்படி 2,490 வழித்தட கிலோமீட்டரில் கவச் அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,340 ரயில் நிலையங்கள் மேம்படுத்துவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றில் 261 நிலையங்களின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. பயணிகள் வசதிகள், நடைமேம்பாலங்கள், மின் தூக்கிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் பன்முகப் போக்குவரத்து இணைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 2026-27 நிதியாண்டில் 11,972 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஜூன் மாதம் வரை 4,633 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆளில்லா அனைத்து இருப்புப்பாதை கடவைகளும் அகற்றப்பட்டுள்ளதுடன், ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் அமைக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2014 முதல் 2026 மே மாதம் வரை 14,451 ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஜூன் 1 நிலவரப்படி சுமார் 31,17,492 கோடி மதிப்பில் 4,993 மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலத் திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள், பதிலளித்துள்ளார்.



புது டெல்லியில் நேற்று (22.07.2026) கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லி ஜந்தர் மந்தாரில் போராட்டம் நடத்திவரும் கரப்பான்பூச்சி ஜனதா (CJP) கட்சியினரை நேரில் சந்தித்து அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

### பேருந்தில் கல்லூரி மாணவன் தவறி விழுந்து படுகாயம்!

# கூடுதல் பேருந்துகள் இயக்கக் கோரி பயணிகள் போராட்டம்!

திருத்தணி, ஜூலை 23-

திருவாலங்காடு ஒன்றியம் காஞ்சிப்பாடி கிராமத்தை சேர்ந்தவர் வசந்த் (17). திருத்தணி அரசு கலைக்கல்லூரியில் இளங்கலை முதலாமாண்டு படித்து வருகிறார். இவர், வழக்கம்போல் இன்று காலை கல்லூரிக்கு செல்ல திருவள்ளூரில் இருந்து திருத்தணி நோக்கி சென்ற அரசு பேருந்தில் ஏறினார். பேருந்தில் பயணிகள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்கள் அதிக அளவில் பயணம் செய்ததால் கூட்ட நெரிசலில் புட் போர்டில் நின்றபடி கல்லூரி மாணவன் வசந்த் பயணம் செய்துள்ளார்.

சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலை கூளூர் அருகே பேருந்து வந்தபோது, நிலைதடுமாறி கல்லூரி மாணவன் வசந்த் கீழே விழுந்து படுகாயமடைந்தார். உடனடியாக பேருந்து ஓரம்கட்டப்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதனிடையே, கூடுதல் பேருந்து இயக்க கோரி பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவஇடத்துக்குவந்த கனகம்மாசத்திரம் போலீசார் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, திருவள்ளூர்-திருத்தணி இடையில் காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இல்லாததால் பயணிகள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கூட்ட நெரிசல் நிறைந்த பேருந்துகளில் பயணம் செய்கின்றனர்.

இதனால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. திருவள்ளூர் - திருத்தணி இடையில் காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும் என்றனர். கூடுதல் பேருந்துகள் இயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்தனர். இதனால் அனைவரும் கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் கனகம்மாசத்திரம் பகுதியில் பரபரப்பு நிலவியது.

### ஆசிரியை தம்பதி வீடு உள்பட

# திருச்சியில் 3 வீடுகளை உடைத்து ரூ.1 கோடி நகைகள் கொள்ளை!

திருவெறும்பூர், ஜூலை 23-

ஆசிரியர் தம்பதி உள்பட 3 வீடுகளை உடைத்து 1 கோடி ரூபாய் மதிப்பு நகை களை மர்ம நபர்கள் கொள் ளையடித்து உள்ளனர்.

திருச்சி வடக்கு காட்டூர் அந்தோணியார் கோயில் தெருவை சேர்ந்த ஆசி ரியை தம்பதி மரியன் ஸ்டீபன் (45). ஆரோக்கியம். இவர்கள் அங்குள்ள பள்ளி யில் பணியாற்றி வருகின்ற னர். நேற்று காலை இருவ ரும் வீட்டை பூட்டிவிட்டு வேலைக்கு சென்றுவிட்டு அன்றைய தினம் மாலை வீட்டுக்கு வந்தனர். அப்போது வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த செயின், மோதிரம் உள்பட 32 பவுன் நகையை மர்ம நபர்கள் திருடிச் சென்றி ருப்பது தெரியவந்தது.

இது குறித்து மரியன் ஸ்டீபன் அளித்த புகா ரின் பேரில், திருவெறும்பூர் போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர்.

துவாக்குடி அருணாபுரி நகரை சேர்ந்தவர் கோவிந்த ராஜ்(38). இவர் காரைக்கா லில் உள்ள ஓஎன்ஜிசி நிறுவ னத்தில் பணியாற்றுகிறார். இவரது மனைவி ரம்யா. இவர்களுக்கு தமன் சங்கர், விபாகர் என்ற மகன்கள் உள்ளனர். ஓஎப்டி தொழிற்சாலை பகுதியில் உள்ள பள்ளியில் படித்துவரும் இருவரையும் விடுவதற்காக நேற்று காலை 8 மணிக்கு வீட்டை பூட்டிவிட்டு ரம்யா சென்றார். இதன்பின்னர் துவாக்குடி பெல் நகரில் மாமியார் வீட்டில் இருந்து நேற்று மாலை வீடு திரும்பிய போது வீட்டு மாடியில் உள்ள கதவு பூட்டை மர்ம நபர்கள் உடைத்து உள்ளே சென்று 40 பவுன் நகையை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

பொன்மலைப்பட்டி தென்றல் நகரை சேர்ந்தவர் டேவிட் (53). இவரது மனைவி புஷ்பா, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். கடந்த 18ம்தேதி கேர ளாவில் உள்ள உறவினர் வீட்டு நினைவு நாள் நிகழ்ச் சிக்கு சென்றுவிட்டு நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு வந்தனர். அப்போது வீட்டு பூட்டை உடைத்து 38 பவுன் நகை கொள்ளைப்போனது தெரிந்தது.

திருச்சியில் அடுத்தடுத்து 3 வீடுகளை உடைத்து சுமார் 110 பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.1.10 கோடி.

### டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ்

# பஞ்சாயத்து இயந்திர மயமாக்கல் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

## மக்களவையில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள பஞ்சாயத்து இயந்திரமயமாக்கல் திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் நோக்கங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில வாரியாக, குறிப்பாக தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சி தொகுதியில், ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

இத்திட்டத்தின் கீழ் உள்ள கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை மற்றும் திட்டமிடல், கணக்கியல், கண்காணிப்பு, சேவை வழங்குதல் போன்ற முக்கிய பஞ்சாயத்து செயல்பாடுகளில் அடையப்பட்ட டிஜிட்டல்மயமாக்கலின் அளவு என்ன?

போதுமான இணைய இணைப்பு இல்லாமை, திறன் மேம்பாட்டு இடைவெளிகள் மற்றும் பிற மின்வணிக தளங்களுடன் ஒப்பிடுவதில் உள்ள சிக்கல்கள் என்ன? க



தரவுப் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் திட்டத் தின் நிலுவையில் உள்ள கூறுகளைக் காலவரையறைக்குள் முடிப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் நாட்டில் முழுமை யாகச் செயல்படுத்துவதற்கான காலக்கெடு எவ்வளவு?

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் குடிமக்கள் குறைதீர்க்கும் அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த ஒன்றியஅரசு முன்மொழிகிறதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

# ஆர்.கே.பேட்டை - கிளைக் கழக இளைஞரணி ஏ.ஆர்.முத்துக்குமார் மறைவு!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் நேரில் அஞ்சலி!

திருவள்ளூர், ஜூலை 23

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், ஆர்.கே. பேட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அம்மையார்குப்பம் ஜி.எஸ்.டி. நகர் கிளைக்கழக இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.ஆர்.முத்துக்குமார் அவர்கள் உடல்நிலை குறைவால் மறைவு எழுதினர்

தகவல் அறிந்த, திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் நேரில் சென்று, மறைந்த முத்துக்குமாரின் உடலுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். தொடர்ந்து, அவரது குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறியதுடன், இந்த துயரமான நேரத்தில் கழகம் எப்போதும் அவர்களுடன் துணை நிற்கும் என உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில், திருத்தணி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே. ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகளான செங்குட்டுவன், சீராளன், திலகவதி ரமேஷ், சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மறைந்த கழக நிர்வாகிக்கு அஞ்சலி செலுத்தினர். மேலும், ஏராளமான கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களும் பங்கேற்று இறுதி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

# பெரம்பலூர் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்க!

## மக்களவையில் அருண் நேரு கோரிக்கை!

புதுடெல்லி, ஜூலை 23 -

பெரம்பலூர் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு கோரி ஒன்றிய அரசை வலியுறுத்திய அருண் நேரு மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் மக்காச்சோளம், நெல், பருத்தி உள்ளிட்ட முக்கிய பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மக்களவையில் பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு மத்திய அரசின் கவனத்தை வலுவாக ஈர்த்தார்.



பெரம்பலூர் விவசாயிகளின் உண்மை நிலையை எடுத்துரைத்த அவர், அவர்களுக்காக அரசு மேற்கொண்ட ஆய்வுகள் என்ன, அதன் முடிவுகள் என்ன, தரமான விதைகள், உரங்கள், எளிய கடன் வசதி, தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உறுதியான சந்தை வாய்ப்புகளை வழங்க இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மத்திய அரசிடம் நேரடியாகக் கேள்வி எழுப்பி விளக்கம் கோரினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, பெரம்பலூரில் புதிய பயிர் ரகங்கள் அறிமுகம், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், ஒழுங்குமுறை சந்தைகள், eNAM வசதி மற்றும் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எம் பி அருண் நேரு பெரம்பலூர் விவ சாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசின் அனைத்து திட்டங்களும் காகிதத்தில் மட்டுமல்லாமல், முழுமையாக களத்தில் செயல்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து நலன்களும் காலதாமதமின்றி சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். பெரம்பலூர் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன்என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பெரம்பலூர் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தினார் .

பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள், வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவோர் வாய்ப்புகள் போதுமான அளவில் கிடைக்கிறதா என்பதை மக்களவையில் பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு அவர்கள் கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக, வேளாண்மை சார்ந்த தொழில்கள், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் புதிய துறைகளில் பெரம்பலூர் இளைஞர்களுக்கு என்னென்ன பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன, எத்தனை பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன, பயிற்சி பெற்றவர்களில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது, பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு என்ன சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கு மத்திய அரசிடம் விரிவான விளக்கம் கோரினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அரசு, பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் ஷிக்ஷன் சன்ஸ்தான் (JSS), தேசிய பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS) மற்றும் தொழிற்பயிற்சி நிலை யங்கள் (ITIs) மூலம் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பல்வேறு தொழில்துறை பயிற்சிகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எம் பி அருண் நேரு பெரம்பலூர் இளைஞர்கள் வேலை தேடி வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலை மாற வேண்டும். மத்திய அரசின் அனைத்து திறன் மேம்பாட்டு திட்டங்களும் பெரம்பலூர் இளைஞர்களை நேரடியாக சென்றடைய வேண்டும். பயிற்சியுடன் வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, பெரம்பலூர் இளைஞர்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்று தெரிவித்தார்.

### தியாகராயர் நகர் 133 வது வட்டச் செயலாளர்

# பி.ஜெயக்குமார் மாமியார் கே.பாக்கியம் மறைவு!

## மயிலை. த.வேலு – கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி அஞ்சலி!

சென்னை, ஜூலை 23-

தியாகராயநகர் மேற்குப் பகுதி 133 வது வட்டச் செயலாளர் பி. ஜெயக்குமார் மாமியார் திருமதி கே.பாக்கியம் (79) அவர்கள் 22.07.2026 மாலை 7 மணி அளவில் திரு.வி.க. குடியிருப்பு தேனாம்பேட்டை சென்னை-18ல் உள்ள அன்னாரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்து சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை.த.வேலு, பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை.எம்.சி., கோ.சு. மணி, ராஜா அன்பழகன், வட்டச் செயலாளர்கள் டி. கமல், தட்சன் ஹரிகரன், ந.மோ.முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, பி. மாரி, கோ.உதயசூரியன், லட்சுமி காந்தன், ஜி.பி.செந்தில்குமரன், மு.ம. செந்தில் குமார், வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சக்திவேல், மு.செல்வகுமார், புதூர் ஆர்.லோகு உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (23.07.2026) மாலை 3 மணி அளவில் கண்ணம்மாபேட்டை சுடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.

# மண்டபம் அருகே ரூ.5 லட்சம் மதிப்பு கடல் அட்டைகள் பறிமுதல்!

மண்டபம், ஜூலை 23–

ராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள்கள் மற்றும் வலி நிவாரணி மாத்திரைகள், மஞ்சள், கடல் அட்டைகள், அழகு சாதன பொருட்கள் கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுக்க கடலோர காவல்படையினர் மற்றும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், மண்டபம் அருகே மரைக்காயர்பட்டிணம், வேதாளை கடற்கரை பகுதிகளில் கடலோர குழுமம் காவல் நிலைய ஆய்வாளர் ஜான்சி ராணி தலைமையில் போலீசார் நேற்றுமாலை ரோந்து பணியில் ஈடுபட்டபோது வேதாளை கடற்கரை பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பைக்கில் பிளாஸ்டிக் கூடையுடன் வந்த இருவரை வழிமறித்தனர்.

இருவரும் போலீசாரை பார்த்தும் பைக் மற்றும் பிளாஸ்டிக் கூடையை போட்டுவிட்டு தப்பியோடினர். கூடையை சோதனை செய்ததில் இரண்டு சாக்கு பைகளில் கடல் அட்டைகள் இருந்தது. கடல் அட்டைகள் மற்றும் பைக்கை பறிமுதல் செய்தனர். கடல் அட்டையை மதிப்பீடு செய்ததில், அவை சுமார் 100 கிலோ எடையுள்ள பச்சை அட்டைகள் என்பதும் இதன் மதிப்பு சுமார் ரூ.5 லட்சம் எனவும் தெரியவந்தது. இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து 2 பேரை தேடி வருகின்றனர்.